சுருக்கம்

பள்ளிக்கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2011–2012ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டது – 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

பள்ளிக் கல்வி [பக5(1) ]த்துறை

அரசாணை (1டி) எண். 10 நாள்: 20.01.2015

(திருவள்ளுவராண்டு 2045, தை 6)

படிக்கப்பட்டவை:-

(1) அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வித் துறை நாள் 02.12.2011.
(2) அரசாணை (1டி) எண்.92, பள்ளிக் கல்வித் [பக.5(1)]துறை நாள் 22.04.2014.
(3) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.095294/எல்/இ3/2014 நாள் 18.12.2014.

----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி, அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2011–2012ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 31.12.2014 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்ட அரசாணையின்படி, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ன்படி அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ், 2011–2012ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தற்காலிக நீட்டிப்பு 31.12.2014 உடன் முடிவடைவதால், அப்பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. மேற்காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தற்காலிக நீட்டிப்பு வழங்கப்பட்ட குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி, அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கான இணைப்பில் காணும் 1282 பட்டதாரி ஆசிரியர் (ரூ.9300–34800/– + 4600 தர ஊதியம் ) பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 31.12.2015 வரை அல்லது தற்காலிகப் பணியிடங்களுக்கான தேவை குறித்து

நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. பள்ளிக்கல்வித் துறையின் கீழ் ஒப்பளிக்கப்பட்டு மேலே பத்தி 3–ல் பணியிட நீட்டிப்பு வழங்கப்படும் ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> 2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 – அரசு இடைநிலைப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AZ –அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் – 01 சம்பளங்கள்.
> (த.தொ.கு 2202 02 109 AZ 0108)

5. மேற்படி செலவினம் அனைவருக்கும் கல்வி திட்ட நிதியிலிருந்து திரும்ப பெறப்பட்டு கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படவேண்டும்:–

> 0202 கல்வி, போட்டி, விளையாட்டுகள், கலையும் பண்பாடும் – 01 பொதுக்கல்வி – 102 – இடைநிலைக்கல்வி AK அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தொகை வழங்குவதற்கான வரவினங்கள்.
> (த.தொ.கு 0202 01 102 AK 0001)

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.73134/கல்வி–II/2014, நாள் 13.01.2015–ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு பொது I & II) துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் (வரவு–செலவு/தொ.க3) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (அநமு) பிரிவு, சென்னை–9.
இருப்புக்கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்

3/3

## இணைப்பு

**(அரசாணை (1டி) எண்.10, பள்ளிக் கல்வி [பக5(1) ]த்துறை நாள்: 20.01.2015)**

பள்ளிக் கல்வித் துறையில் அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான மற்றும் பாடவாரியான விவரம் :-

| வரிசை எண் | மாவட்டம் | அறிவியல் மற்றும் கணிதம் | சமூக அறிவியல் | மொழிப் பாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 2 | 2 | 6 |
| 2. | கோயம்புத்தூர் | 71 | 71 | 71 | 213 |
| 3. | தர்மபுரி | 24 | 24 | 23 | 71 |
| 4. | திண்டுக்கல் | 1 | - | - | 1 |
| 5. | ஈரோடு | 31 | 31 | 30 | 92 |
| 6. | காஞ்சிபுரம் | 18 | 18 | 18 | 54 |
| 7. | கரூர் | 1 | 1 | 1 | 3 |
| 8. | கிருட்டிணகிரி | 19 | 19 | 19 | 57 |
| 9. | மதுரை | 24 | 24 | 24 | 72 |
| 10. | நாகப்பட்டிணம் | 15 | 15 | 15 | 45 |
| 11. | நாமக்கல் | 5 | 5 | 4 | 14 |
| 12. | பெரம்பலூர் | 8 | 8 | 8 | 24 |
| 13. | புதுக்கோட்டை | 17 | 17 | 16 | 50 |
| 14. | சிவகங்கை | 11 | 11 | 11 | 33 |
| 15. | தேனி | 4 | 4 | 3 | 11 |
| 16. | திருச்சி | 7 | 7 | 7 | 21 |
| 17. | திருநெல்வேலி | 7 | 7 | 7 | 21 |
| 18. | திருவள்ளூர் | 23 | 23 | 23 | 69 |
| 19. | திருவாரூர் | 19 | 19 | 19 | 57 |
| 20. | திருவண்ணாமலை | 22 | 22 | 22 | 66 |
| 21. | தூத்துக்குடி | 7 | 7 | 7 | 21 |
| 22. | வேலூர் | 35 | 35 | 35 | 105 |
| 23. | விழுப்புரம் | 57 | 57 | 56 | 170 |
| 24. | விருதுநகர் | 2 | 2 | 2 | 6 |
| | மொத்தம் | 430 | 429 | 423 | 1282 |

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல்/

பிரிவு அலுவலர்